[1991 சனவரி 21

மாவட்ட நீதிமன்றத்தை நாமக்கல்லுக்கு மாற்றுதல்.

* 7988—திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சேலத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற மூன்று மாவட்ட நீதிமன்றங்களில் ஏதாவது ஒன்றை நாமக்கல்லுக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ); சேலம் மாவட்டம், நாமக்கல்லில் மாவட்ட நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு, உயர் நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல்லில் மாவட்ட நீதிமன்றம் அமைய வேண்டியதினுடைய அவசியத்தை சேலம் மாவட்ட முதன்மை மாவட்ட நீதிபதி அவர்கள் ஆய்வு செய்து உயர்நீதிமன்றத்திற்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நாமக்கல்லில் இருக்கின்ற 'Senior Advacates' என்று சொல்லப்படுகின்ற வழக்கறிஞர்கள் ஒரு குழுவாகக் கூடி மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி அவர்களைச் சந்தித்து, நாமக்கல்லில் நீதிமன்றம் அமைய வேண்டியதன் அவசியத்தைச் சொன்னார்கள். அப்போது அரசு உத்தரவு பிறப்பித்தால் சேலம் நகரில் இருக்கின்ற ஏதாவது ஒரு நீதிமன்றத்தை நாமக்கல்லுக்கு மாற்றுவதற்கு உயர் நீதிமன்றத்திற்கு எந்த விதத் தடையும் இல்லை; ஆகவே, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் மூன்று மாவட்ட நீதிமன்றங்களில் ஏதாவது ஒன்றை நாமக்கல்லுக்கு மாற்றவேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல், உயர்நீதிமன்றத்தினுடைய குறிப்புரை அரசுக்கு அனுப்பப்படுமானால் அரசு உரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு இருக்கின்ற மூன்று நீதிமன்றங்களில் ஒரு நீதி

மன்றத்தை நாமக்கல்லுக்கு மாற்றுவதால் பொருளாதார இழப்பு என்பது அரசுக்கு ஏற்படாது. காரணம், புதிதாக நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை அல்ல. இருக்கின்ற நீதிமன்றங்களில் ஒரு நீதிமன்றத்தை ''சிப்ட்'' செய்கின்ற அளவுக்கு அங்கேயிருந்து மாற்றம் செய்தால் அங்கே கட்டிட வசதி இருக்கிறது. ஒரு மாவட்ட நீதிமன்றம் செயல்படுகின்ற அளவுக்கு 'Civil and criminal' வழக்குகளும் அங்கே பதிவாகின்ற நிலை இருப்பதால், அதற்கு முக்கியத்துவம் அளித்து அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில், அதிகக் கவனம் செலுத்தி அந்த நீதிமன்றத்தை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். அவரோடு வாதம் செய்ய நான் விரும்பவில்லை. இறுதியான முடிவு செய்ய வேண்டியது உயர்நீதிமன்றம் தான். உயர்நீதிமன்றத்தினுடைய பதில் கிடைத்த பிறகு தான் அரசு நடவடிக்கை எடுக்க முடியும். இது தொடர்பாக உயர்நீதிமன்றம் விரைவில் முடிவைத் தெரிவிப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த முடிவு வந்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல், நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் போலவே இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள (சிரிப்பு) மாவட்ட நீதிமன்றம் நீண்ட நாட்களாகப் பிரிக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, காமராசர், இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டங்களில், அந்த மாவட்ட நீதிமன்றம் எப்போது பிரிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சேலம் மாவட்டம் சம்பந்தப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருவேளை தலைவருக்கும் சம்பந்தம் இருப்பதால் (சிரிப்பு)—இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இராமநாதநாதபுரத்திலும், சிவகங்கையிலும் அமைப்பதற்கு அறிவிப்புகள் கொடுத்தாகி விட்டன. எனவே உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கான அந்த ஸ்டாஃப் எல்லாம் போட உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.